# True Disciple

# உண்மை சீஷன்

October - December 2022 அக்டோபர் - டிசம்பர்

A Quarterly News Bulletin of City Revival AG Church

## உங்களுக்கு சமாதானம்

## *Peace Be With You*

யோவான் 20 : 19 John

# சமாதானப் பிரபு இயேசு

பாஸ்டர். **ஜெரி டேனியல்**



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களுக்கு சமாதானப் பிரபுவாகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி, " நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, **சமாதானப்பிரபு** என்னப்படும்" என்று முன்னுரைக்கிறார் (ஏசாயா 9:6). மீகா என்னும் தீர்க்கதரிசியும் இயேசுவைக் குறித்து "இவரே சமாதானக் காரணர்" என்கிறார் (மீகா 5:5). ஆசாரியனாகிய சகரியா தீர்க்கதரிசனமாய், "நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே நடத்த வந்த அருணோதயம் இயேசு" என்று பாடுவதை வாசிக்கிறோம் (லூக்கா 1:78,79). இப்படி நமக்காக பிறந்த இயேசு, நம்முடைய வாழ்விலே சமாதானப்பிரபுவாக எவ்விதம் செயல்படுகிறார் எனவும், அவர் நமக்கு அளிக்கும் சமாதானத்தின் மகத்துவம் எத்தகையது என்பதைக் குறித்தும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். மூன்று நிலைகளிலே இயேசு நமக்கு சமாதானம் அளிக்கிறார்.

## 1. உன்னத தேவனோடு சமாதானம்
## Upward Peace

நம்முடைய கர்த்தாராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 5:1). நாம் தேவனுக்கு சத்துருக்களாய் இருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் (ரோமர் 5:10). நாம் எப்படி தேவனுக்கு சத்துருக்கள் ஆனோம்? ஆதாம் ஏவாள் என்னும் முதல் மனிதர்களுடைய பாவத்தினால் முழு மனுக்குலமும் பாவத்திற்குள்ளானது (ரோமர் 5;12). ஆகவேதான் தாவீது "என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறுகிறார் (சங். 51:5). "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 59:2). நம் பாவத்தினால் நாம் மரணத்துக்கு பாத்திரர்களானோம் (ரோமர் 6:23). நம்முடைய பாவங்கள் நம்மை படைத்த தேவனிடம் நமக்கு இருந்த உறவையும் சமாதானத்தையும் கெடுத்துப் போடுகிறது. இயேசுவோ தமது பரிசுத்த இரத்தத்தைச் சிந்தி, நமக்கு சமாதானத்தை உண்டாக்கி, உன்னத தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார் (கொலோ. 1:20). மேலும் இயேசுவே நம்முடைய சமாதான காரணராகி, தேவனோடு நமக்கிருந்த பகையை சிலுவையினால் கொன்று, நம்மை புதிய மனுஷராக்கி, சமாதானம்பண்ணி, தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார் (எபேசி. 2:14-16).

பாவம் நம் சமாதானத்தை கொள்ளையாடிவிடும், "துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை" (ஏசாயா 48:22; 57:21). பாவிகளின் வாழ்வு சமாதானமின்றி கொந்தளிக்கிற கடல்போல் இருக்கும் என்று வேதம்

கூறுகிறது (ஏசாயா 57:20). அநேக பாவங்களினால் சமாதானம் இழந்து தவித்த ஒரு பெண், இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் அவரிடம் மன்னிப்பு பெற வேண்டி அவரை தேடி வந்தாள். இயேசு அவளை நோக்கி, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது: சமாதானத்தோடே போ" என்றார் (லூக்கா 7:37,48,50). உன்னத தேவனோடு நம்மை ஒப்புரவாக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். தேவனோடுள்ள சமாதானத்தை இழந்து தவிக்கிறீர்களோ? இன்றே உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்பி, இயேசுவின் இரத்தம் அருளும் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

## 2. உள்ளத்தில் சமாதானம்
## Inward Peace

''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக''. ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 14:1,27). பயங்களும், கவலைகளும் உள்ளத்தின் சமாதானத்தைக் கெடுக்கிறது. உலகம் தரும் சமாதானம் நிலையற்றது. ஆனால் இயேசுவோ நம் உள்ளத்தை கலங்கச் செய்யும் பயங்களையும் கவலைகளையும் முற்றிலும் நீக்கிவிடுகிறார். இது எப்படி நடக்கும்? இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தேவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து அவரை உறுதியாய் பற்றிக்கொள்ளவேண்டும். "உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 26:3). பூரண சமாதானம் என்றால் நிலையான, எப்பொழுதும் நிலைத்திருக்கும் சமாதானம் ஆகும். தேவன், தம்மை முழுமையாய் நம்பிப் பற்றிக்கொள்கிறவர்களுக்கு தெய்வீக பாதுகாவலையும், பராமரிப்பையும் நிரந்தரமாக வழங்குகிறார் என்பதே இதன் பொருள்.

நாம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் தேவனிடத்தில் நம் உள்ளத்தை ஊற்றிவிடும்போது, அவருடைய பூரண சமாதானம் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ளும் என்று பவுல் கூறுகிறார் (பிலி. 4:6,7). 12 வருடகாலமாக பெரும்பாடு என்னும் நோயினால் அவதியுற்று, அனைத்தையும் செலவழித்தும் சுகமின்றி, சமாதானமின்றி தவித்த ஒரு பெண் இயேசுவை முழுமையாக விசுவாசித்தபோது அற்புத சுகமும், சமாதானமும் பெற்றாள் (லூக்கா 8:43-48). யூதரைக் குறித்த பயத்தினால் கலங்கியிருந்த அப்போஸ்தலருக்கு இயேசு சமாதானம் தந்து தேற்றினார் (யோவான் 20:19,21,26). மீதியானியரால் தாக்கப்படுவோம் என்று அஞ்சி வாழ்ந்த கிதியோனுக்கு "சமாதான கர்த்தராக" (யேகோவா ஷாலோம்) தரிசனமாகி அவனை திடப்படுத்தினார் (நியா. 6:23,24). இன்றே உங்கள் உள்ளத்தைக் கலங்கச் செய்யும், பயங்களையும், கவலைகளையும் சமாதானப்பிரபுவாகிய இயேசுவிடம் ஒப்படைத்து, அவர் தரும் தெய்வீக பூரண சமாதானத்தை உள்ளத்தில் பெற்று மகிழுங்கள்.

## 3. உறவுகளில் சமாதானம்
## Outward Peace


உன்னத தேவனோடும், உள்ளத்திலும் மட்டும் அல்ல; நம் உறவுகளிலும் நமக்கு சமாதனத்தைத் தர இயேசு விரும்புகிறார். ''கூடுமானால் உங்களால் ஆன மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது (ரோமர் 12:18; எபி. 12:14). இன்று பல குடும்பங்களிலே சமாதானம் இன்றி வன்முறை நிலவுகிறது. கணவன் மனைவிக்கிடையே சமாதானமின்றி விவாகரத்துகள் பெருகியுள்ளது. பெற்றோர் பிள்ளைகளுக்குள் சமாதானமில்லை. அண்ணன் தம்பிக்குள் சமாதானமில்லை. இப்படி உறவுகளிலே சமாதானமின்றி போவதற்குக் காரணம் அன்பின்மையும், அகம்பாவமும் (Ego), மன்னியாமையுமே. இயேசு நம்மீது வைத்த நிபந்தனையற்ற அன்பினாலே தாம் தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலாகி, மரண பரியந்தம் கீழ்படிந்து, தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று வாசிக்கிறோம் (பிலிப்பியர் 2:6-8). மேலும் இயேசு முந்தி நம்மில் அன்புகூர்ந்து, நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காக சிலுவையில் மரித்து, தம்முடைய நிபந்தனையற்ற அன்பை விளங்கப்பண்ணினார் (ரோமர் 5:8).

இயேசுவை பின்பற்றும் நம்மிடம் இப்படிப்பட்ட தாழ்மையின் சிந்தையும், நிபந்தனையற்ற அன்பும் இருக்குமாயின் நமது உறவுகளில் சமாதானம் உண்டாகும். இயேசு நம்முடைய சமாதான காரணராய் இருந்து பகையாகிய நடுச்சுவரை தகர்த்துப் போடுகிறார் (எபே. 2:14). இயேசு கூறிய கெட்டக்குமாரனைப் பற்றிய உவமையை லூக்கா 15:10-24 வசனங்களில் வாசிக்கிறோம். ஆணவத்தினால் தன் தந்தையை விட்டுபிரிந்து சென்ற இளையமகன். தனது தவறை உணர்ந்தவனாய், மனம்வருந்தி, தாழ்மையுடன் தன் தந்தையிடம் மன்னிப்பு கோர வருவதையும், அவன் கேட்கும் முன்னரே அவன் தந்தை தனது நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தி அவன் செய்த குற்றத்தை மன்னிப்பதையும் பார்க்கிறோம். இத்தகைய அன்பும், தாழ்மையும், மன்னித்தலுமே உறவுகளிலே நிலையான சமாதானத்தையும், அந்நியோந்நியத்தையும் கொண்டு வரும். இன்று உங்கள் உடைந்த உறவுகளையும், நீங்கள் இழந்து போன உறவுகளையும் எண்ணி கண்ணீர் வடிக்கிறீர்களோ? கவலைப்படாதீர்கள். நீங்கள் அன்புடனும், தாழ்மையுடனும் மன்னிக்கவும், மன்னிப்பு கேட்கவும் தயாராக இருப்பீர்களானால், உங்கள் உறவின் விரிசல்களை சரி செய்யவும், நீங்கள் இழந்த உறவுகளை மீட்டுத்தரவும் இயேசு வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கும் தேவன் சமாதானத்தின் தேவன் (ரோமர் 15:33; எபிரெயர் 13:20), சமாதானப்பிரபு மற்றும் சமாதானக்காரணர் (ஏசாயா 9:6; மீகா 5:5). அவர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் (சங். 29:11) என்று வேதம் கூறுகிறது. ஆகவே அன்புக்குரியவர்களே, இயேசு கிறிஸ்துவின் பூரண சமாதானம் உங்கள் வாழ்வில் நிறைந்து, பெருகுவதாக!

**சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும்**
**உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக.**
**கர்த்தர் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பாராக (2 தெச. 3:16)!**

# இயேசு ஏன் மானிடனாய் பிறந்தார்?



உலக சரித்திரத்தைக் கிறிஸ்துவுக்கு முன் என்றும் (கி.மு). கிறிஸ்துவுக்குப் பின் என்றும் (கி.பி) பிரித்த சரித்திரநாயகனாகிய இயேசுவின் பிறப்பை ஒவ்வொரு ஆண்டும் உலகமெங்கும் பலகோடி மக்கள் கொண்டாடுகின்றனர். இயேசு 2022 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் பிறந்த நோக்கம் என்ன? மற்றும் அவரது பிறப்பில் நமது பங்கு என்ன? என்பதைச் சற்று தியானிப்பது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

**1. கடவுளை வெளிப்படுத்த** (To REVEAL God)

தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுவே அவரை வெளிப்படுத்தினார் (யோவான். 1:18) என்று வேதம் கூறுகிறது. கடவுளின் அன்பை, மனதுருக்கத்தை, இரக்கத்தை, வல்லமையை வெளிப்படுத்தும்படியாக இயேசு பிறந்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் (யோவான் 14:9) என்று இயேசு சொன்னார். கடவுள் மனிதனாக இவ்வுலகத்தில் 'இயேசு' என்ற பெயரில் பிறந்தார். அவர் மனிதனோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு மனிதனுடைய துக்கங்களில் பங்கு பெற்று, மனிதனை அவனுடைய எல்லா பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கிறவராகத் தம்மை வெளிப்படுத்தினார்.

**2. மனிதனை விடுவிக்க** (To REDEEM Man)

இயேசு இவ்வுலகில் இரட்சகராக, விடுவிக்கிறவராகப் பிறந்தார். இயேசு என்ற பெயருக்கு அர்த்தம் இரட்சகர் என்பது (மத்தேயு 1:21). இயேசு நம்மைக் கீழ்க்கண்ட காரியங்களிலிருந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

- **பாவம்** (Sins) : பாவம் இல்லாமல் பிறந்த இயேசு நம்மை சகலவித பாவத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார். இயேசு சிலுவையியல் சிந்தின இரத்தம் நம்முடைய ஜென்ம பாவங்கள் அனைத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7). உலகத்தில் பிறக்கிற அனைவரும் பாவத்தில் தான் பிறக்கிறோம். பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). ஆனால் இயேசு நமக்குப் பாவத்திலிருந்து விடுதலையையும் நித்தியவாழ்வையும் அளிக்கிறார்.
- **சாபம்** (Curse) : பலவிதமான சாபங்களின் நிமித்தம் தோல்விகளையும், இழப்புகளையும், ஏமாற்றங்களையும் அடைந்துவரும் மக்களின் சாபங்களை நீக்கி விடுவிக்க இயேசு உலகத்தில் வந்தார். இயேசு மனுக்குலத்தின் அனைத்து சாபங்களையும் தன்மேல் சிலுவையில் ஏற்றுக்கொண்டு மனிதர்களின் சாபங்களை நீக்கி அவர்களை ஆசீர்வதிக்கிறார் (கலா 3:13). மேலும் உங்கள் வாழ்வில் உள்ள தரித்திர நிலைமைகளைப் போக்க இயேசுவால் கூடும். தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினவர், 5 அப்பங்களையும், 2 மீன்களையும் கொண்டு 5000 பேர்களைப் போஷித்தவர் உங்கள் வாழ்வில் உள்ள குறைகளை, கஷ்டங்களை போக்கி, இயேசு உங்களை விடுவிப்பார்.
- **வியாதி** (Sickness) : இயேசு நம்மை வியாதிகளிலிருந்து விடுவித்து நமக்குச் சுகவாழ்வு தரும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமத்தார் (மத். 8:17). அவருடைய தழும்புகளால் சுகமாகிறோம் (ஏசாயா 53:5) என்று பைபிள் கூறுகிறது. சகலவிதநோய்களையும் தீராதவியாதிகளையும் சுகமாக்க இயேசு வல்லவர்.

❖ **பயம்** (Fear) : இயேசு நம்மை பயத்திலிருந்து விடுவிக்கிறார். ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே பீடிக்கப்பட்டுள்ள யாவரையும் விடுதலைப் பண்ண இயேசு பிறந்தார் (எபி. 2:15) என்று வேதம் கூறுகிறது. இயேசு பிறந்தபொழுது பலமுறை “பயப்படாதிருங்கள்” என்ற நற்செய்தியை தூதர்கள் ஜனங்களுக்கு அறிவித்தார்கள் (லூக்கா 1:13, 30; 2:10; மத். 1:20, 24). பயம் ஒரு கொடுமையான உணர்ச்சி. எதிர்காலத்தைக் குறித்த பயம், மரணபயம், தோல்வி பயம் என்று பலவித பயங்கள் இன்று மனிதனை வாட்டுகின்றன. ஆனால் இயேசு இவையெல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்.

**3. பிசாசின் கிரியைகளை அழிக்க** (To RUIN Satan)

இயேசு பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே பிறந்தார் என்று வேதம் கூறுகிறது. (1 யோவான் 3:8). இன்று பிசாசு மனிதனை மோசம் போக்கிக்கொண்டிருக்கிறான். அநேகருடைய வாழ்க்கையை கெடுத்துக்கொண்டிருக்கிறான். பிசாசு திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறான். ஆனால் நானோ உங்களுக்கு ஜீவன் கொடுக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10) என்று இயேசு கூறினார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட பலரை இயேசு விடுவித்தார். இறுதியாக சிலுவையில் பிசாசை ஜெயித்து, அவன் கிரியைகளை அழித்தார். இயேசு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து இன்றும் உயிரோடிருக்கிறபடியால் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் விடுவிக்கிறார் (அப்.10:38).

**இயேசுவின் பிறப்பின் நமது பங்கு**

**1. இயேசுவுக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள் :**

உலக இரட்சகராகிய இயேசு பிறக்கும்போது அவருக்கு சரித்திரத்தில் இடம் இல்லை (லூக்கா 2:7) என்று வேதம் கூறுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் இருதயத்தில் யாரெல்லாம் இடக்கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள் (யோவான் 1:12). இயேசு இன்றும் உங்கள் இருதயக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார் (வெளி 3:20). அவருக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும் பொழுது உங்கள் உள்ளத்தில் அவர் வருவார். விடுதலையும், சமாதானமும் அளிப்பார்.இன்று உங்கள் உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் உண்டா?

**2. கிறிஸ்துமஸ் நற்செய்தி மற்றவர்களுக்கு அறிவியுங்கள் :**

இயேசுகிறிஸ்துவின் பிறப்பை அறிந்த மேய்ப்பர்கள் மற்றவர்களுக்கு அந்த செய்திகளை அறிவித்தார்கள் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 2:17). இயேசு பிறப்பையும், அவர் பிறந்த நோக்கத்தையும் அறிந்த அன்பானவர்களே, இன்றும் இயேசுவின் பிறப்பை ஒரு முறை கூட அறியாத பல்லாயிரக்கணக்கான மக்கள் நம் பட்டணத்தில், தேசத்தில் உண்டு என்பதை அறியீர்களா? இந்த நற்செய்தியை அறிவிப்பது நம்மேல் விழுந்த மிகப்பெரிய கடமையல்லவா? (1 கொரி. 9:16). இயேசு நமக்காக இவ்வுலகத்தில் வந்து சிலுவையில் மரித்ததை நமக்கு அறிமுகமானவர்கள் அனைவருக்கும் அறிவிப்போம். ஏழை எளியவர்களுக்கு பரிசுகளை கொடுத்து தேவனுடைய அன்பை வெளிப்படுத்துவோம்! கிறிஸ்து இயேசுவின் பிறப்பில் நம் பங்கை நிறைவேற்றுவோம்! தேவன் உங்களை அதிகமாக ஆசீர்வதிப்பாராக!

## இண்டர்நெட் ஆபத்தானதா?




தொலைபேசி என்பது உலகில் எந்த ஒரு இடத்தில் இருக்கும் நபரையும் தொடர்பு கொள்ள பயன்படுகிறது. அது போல இண்டர்நெட் என்பது இணைய தள வசதியோடு இருக்கும் உலகின் எந்த ஒரு கம்ப்யூட்டர்களையும் இணைக்க பயன்படுகிறது.

**I. இண்டர்நெட்டின் பயன்பாடு**

- ❖ எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்து, எந்த நபருக்கும் ஒரு தகவலை விரைவில் அனுப்பவோ, பெறவோ பயன்படுகிறது.
- ❖ எந்த ஒரு தலைப்பிலும் வேண்டிய தகவல்களை உலகமெல்லாம் இருந்து சேகரிக்க பயன்படுகிறது.
- ❖ பொழுதுபோக்கிற்கும் பயன்படுகிறது. விளையாட்டு, வீடியோ, குறும்படங்கள்.
- ❖ வங்கியில் போய் செய்ய வேண்டிய அநேக விசயங்களை வீட்டிலிருந்தே இண்டர்நெட் வசதியுடன் செய்திடாலம்.
- ❖ ரயில் நிலையத்தில், பஸ் நிலையத்தில் போய் வரிசையில் நின்று கஷ்டப்பட்டு டிக்கட் பெறுவதைக் காட்டிலும், வீட்டிலிருந்தே சில நிமிடங்களில் டிக்கெட் எடுத்துக்கொள்ளலாம்.
- ❖ கடந்த 2017 ஜுன் மாதத்தின் கணக்கின்படி இந்தியாவில் 45 கோடி பேர் இண்டர்நெட் பயன்படுத்துகிறார்கள். இது 2020க்குள் 70 கோடியை எட்டும் என கருதப்படுகிறது.

**II. இண்டர்நெட் பயன்படுத்துபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய காரியங்கள் :**

இண்டர்நெட் மிகவும் பயனுள்ளதாய் இருந்தாலும். வாழ்க்கையை சீரழிக்கக் கூடிய காரியங்கள் அதில் உள்ளன. எனவே கீழ்க்கண்ட காரியங்களை கவனமாய் வாசியுங்கள்.

**1. உங்கள் நேரங்களை வீணாக்காதிருங்கள்:**

அளவுக்கதிகமாய் நேரத்தை இண்டர்நெட்டில் செலவழிக்காதீர்கள். குறிப்பாக பிரதான நேரம். அதாவது நீங்கள் புத்தெழுச்சியோடு இருக்கும் நேரம் கடினமான பாடங்களை படிக்க மிகவும் பயன்படும். எனவே அந்த நேரத்தில் இண்டர்நெட்டில் உட்காராதீர்கள். இண்டர்நெட் உங்கள் நேரத்தை விழுங்கி விடும்.

**2.உங்கள் தூக்க நேரத்தை தியாகம் செய்யாதீர்கள்:**

அநேகர் இரவு 10 மணிக்கு மேல் உட்கார்ந்து, நேரம் போகிறதே தெரியாமல் விடிய விடிய உட்கார்ந்திருப்பார்கள். தூக்கம் கெட்டுவிடுகிறது. பகலில் உற்சாகமாக இருக்க முடியாது. உடல் நலம் கெடும். ஒருவருக்கு குறைந்த பட்ச அளவு 6 மணி நேரம் தூக்கம் அவசியம்.

**3. ஜெப தியான நேரத்தை தியாகம் செய்யாதீர்கள்:**

ஜெபத்தைவிட வேத தியானத்தை விட முக்கியமானது ஒன்றும் இல்லை. கம்யூட்டருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்களானால், அது உங்கள் விக்கிரகமாக மாறிவிடும். ஜெபத்தில், வேதத்தில் ஆர்வம் குறைந்துவிடும்.பின்மாற்றம் உங்களை தொடர்ந்து வரும்.

4. **உங்கள் பணத்தை வீணாக்காதீர்கள்:**

இண்டர்நெட்டிற்கு இவ்வளவு பணம் தான் செலவழிக்க வேண்டும் என்று திட்டமிடுங்கள். அதற்குள் முடித்துவிடுங்கள். பணத்தைக் குறித்து ஆண்டவருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

5. **உங்களுடைய சரீர ஆரோக்கியத்தை தியாகம் செய்யாதீர்கள்:**

அதிக நேரம் கம்ப்யூட்டரில் உட்காருவதினால் முதுகு வலி, கழுத்து வலி, உடல் பருமன், பார்வை கோளாறு, காது கேட்பதில் பிரச்சனை போன்ற வியாதிகள் வர அதிக வாய்ப்புகள் இருக்கிறது. உடல் கெட்டுப்போன பிற்பாடு எவ்வளவு பணம் செலவழித்தாலும் ஒரிஜினல் கிடைக்காது.

6. **கம்ப்யூட்டரை தனி அறைக்குள் வைக்க வேண்டாம்:**

தனி அறைக்குள் கம்ப்யூட்டர் இருந்தால் தவறான காரியங்களை பார்ப்பதற்கு சோதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. பரிசுத்தம் பாதிக்கப்படும். எனவே குடும்ப அங்கத்தினர்கள் எளிதில் பார்க்கக்கூடிய இடத்தில் இருந்தால் சோதனையை தவிர்க்கலாம்.

7. **குடும்ப உறவுகளை தியாகம் செய்யாதீர்கள்:**

அதிக நேரம் கம்ப்யூட்டரில் உட்காருவதனால், மனிதர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குடும்பத்திலுள்ளவர்களோடு பேச நேரம் செலவழிக்க முடிவதில்லை. இதனால் குடும்ப உறவு பாதிக்கப்படுகிறது.

8. **தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்துங்கள்:**

இண்டர்நெட் பயன்படுத்த வேண்டிய அவசியமானால் மட்டும் இண்டர்நெட் பயன்படுத்துங்கள். மற்றபடி பொழுதுபோக்கிற்காக, ஒரு நோக்கமில்லாமல் பயன்படுத்தினால் தேவையில்லாததை பார்த்து, கடைசியில் குற்ற மனச்சாட்சியில் போய் விட வாய்ப்பு இருக்கிறது.

9. **தேவையில்லாத விளம்பரங்களை கிளிக் செய்யாதீர்கள்:**

நாம் பிரயோஜனமான ஒன்றை இணையதளத்தில் பார்க்கும் போது தேவையில்லாத விளம்பரங்கள் தோன்றும். வெளித்தோற்றத்தில் ஒன்றுமில்லாதது போல் இருக்கும். ஆனால் உள்ளே போனால் அது அப்படியே பல தேவையில்லாத இணையதள முகவரிக்கு உங்களை அழைத்துச் சென்று விடும். எனவே முதல் கிளிக் செய்வதிலே கவனம் தேவை. பாவம் நீங்கள் விரும்பும் எல்லைக்கு அப்பால் உங்களை அழைத்துச் செல்லும்.

10. **முன் பின் தெரியாத நபருடன் சேட்டிங் பண்ண வேண்டாம்:**

முன் பின் தெரியாத நபர் நல்லவரா, கெட்டவரா, திருமணம் ஆனவரா, ஆகாதவரா என்பதை அறிய முடியாது. எனவே அவர்களோடு சேட்டிங் பண்ணுவது நல்லதல்ல, எச்சரிக்கையாயிருங்கள். மாட்டிக் கொள்ளாதீர்கள்.

## 21 நாட்கள் உபவாச ஜெபம்



**அக்டோபர் 1 - அக்டோபர் 21**

தினமும் காலை 10.30 மணி முதல் 12.30 மணிவரை
சபையில் ஜெபம் நடைபெறும். பங்குபெறுங்கள்!



## இலக்கை நோக்கி தொடருங்கள்....



ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

அன்பார்ந்த வாலிபர்களே, நாம் அனைவரும் வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும் என்று தான் விரும்புவோம். தோல்வியை விரும்புவது இல்லை. ஒரு மனிதன் வெற்றி அடைய வேண்டுமானால் முதலாவது, இலக்கு தேவை. ஒரு மாணவனுடைய இலக்கு, பரீட்சையில் தேர்ச்சி அடைவதில் இருக்கும். ஒரு அரசியல்வாதியின் இலக்கு, தேர்தல் வெற்றியில் இருக்கும். ஒரு வியாபாரியின் இலக்கு, அவருடைய லாபத்தில் அல்லது வருமானத்தில் இருக்கும். கிறிஸ்தவ வாலிபர்களாகிய நமக்கும் ஒரு இலக்கு இருப்பது அவசியம். பிலிப்பியர் 3:14-ல் இலக்கை நோக்கி தொடருவதைக் குறித்து பவுல் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்து நமக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கிறார். இயேசு கிறிஸ்து நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ, நமக்கு முன்பாக வாழ்ந்து காட்டியிருக்கிறார். ‘என்னிடம் பாவம் உண்டு என்று உங்களில் யார் என்னை குற்றப்படுத்தக்கூடும்?’ என்று இயேசு கிறிஸ்து ஜனங்களைப் பார்த்து சவாலாகக் கேட்டார் (யோவான் 8:46). அப்படி குற்றமற்றவராக வாழ்ந்த இயேசுகிறிஸ்து சிலுவைக்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தார். எந்த சூழ்நிலையிலும் இயேசு கிறிஸ்து தாம் சிலுவையில் மரிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தை இழக்கவில்லை. கெத்சமனே தோட்டத்தில் வியாகுலத்தோடு இயேசுகிறிஸ்து ஜெபித்த போது ‘பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும்; ஆகிலும் என் சித்தத்தின்படி அல்ல; உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது‘ என்று ஜெபம் பண்ணினார் (லூக்கா 22:42). தன் வாழ்க்கையில் மிகுந்த நெருக்கத்தில் இயேசுகிறிஸ்து இருந்தபோதுகூட உன்னத இலக்கை இயேசு இழக்கவில்லை. பிதாவின் சித்தத்திற்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்தார். சிலுவையில் வெற்றிபெற்றார்.

நாம் அனைவரும் அறிந்த மிகப்பெரிய உலக பிரசித்தி பெற்ற ஒரு தடகள வீரர் உசைன் போல்ட். ஜமைக்கா தேசத்தை சேர்ந்த உசைன் போல்ட் ஓட்டப்பந்தயத்தில் ஒரு பெரிய சகாப்தம். ஒலிம்பிக் போட்டிகளில் 8 தங்கப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்த உசேன் போல்ட், 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் உலக சாதனைகளையும் படைத்துள்ளார். உலக தடகளப் போட்டிகளில் பல வெற்றிகளையும் பெற்றுள்ளார். 2017 ஆம் ஆண்டு நடந்த உலக தடகள போட்டிகளில் அவர் பங்கேற்பதற்கு முன்னால் அவர், “நான் ஒரு சாம்பியனாகவே ஓய்வு பெற விரும்புகிறேன். இது தான் என் கடைசி போட்டி. எனவே நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்” என்று கூறினார். உலகமே எதிர்பார்த்து இருந்த அந்த 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் எதிர்பாராதவிதமாக உசைன் போல்ட் தோல்வியுற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார். உலகமே மிகவும் அதிர்ச்சியில் ஆழ்ந்தது. போட்டிக்கு பின்பாக உசேன் போல்ட் தன்னுடைய பேட்டியில் கூறும்போது ‘என்னுடைய நோக்கத்தை நான் தவற விட்டு விட்டேன். அதுதான் என்னுடைய தோல்விக்கு காரணம்‘ என்று கூறினார். பல உலக சாதனைகள் படைத்தும், பல வெற்றிகளை அவர் பெற்றிருந்தும் தன்னுடைய இறுதி ஓட்டத்தை அவரால் ஜெயமாக முடிக்க முடியவில்லை.

வாலிபர்களே! நம்முடைய வாழ்க்கையிலும் வெற்றிபெற நம்முடைய இலக்கை இறுதிவரை சரியாக வைக்கவேண்டும். உங்கள் இலக்கை சரியாக நிர்ணயம் செய்யுங்கள். உங்கள் வாழ்க்கையில் இலக்கை அடைந்து வெற்றிபெற கர்த்தர் கிருபை தருவாராக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

*- பாஸ்டர். ஜோஸப் சாமுவேல்*

I will make a helper suitable for him. Gen 2:18

# AGAPE CHRISTIAN MATRIMONY

*Helping you to find your life partner*

*Venue :* **CITY REVIVAL AG CHURCH**

**Tuesday & Friday at 4.00 p.m to 6.30 p.m**
**Thursday at 10.30 a.m to 1.00 p.m**

---

**Contact : 98438 51115**



## ஆண்கள் ஐக்கியம்
## Men’s Fellowship

**ஒவ்வொரு மாதமும் 3-வது திங்கட்கிழமை மாலை 6.30 மணி**

ஆண்கள் அனைவரும் பங்குபெறுங்கள்.

## பெண்கள் எழுப்புதல் ஜெபம்
## LADIES REVIVAL PRAYER

வியாழன் தோறும்
காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை



## வாலிபர் ஐக்கியக் கூடுகை
## Youth Fellowship



*முதல் மற்றும் மூன்றாம் ஞாயிறு*
*மாலை 4.30 மணி*

வாலிப சகோதர, சகோதரிகள் அனைவரும் பங்குபெறுங்கள்.

## Your Offerings and Donations Can Be Sent to

A/c Name : City Revival AG Church
A/c Number : 35354599169
Bank Name : STATE BANK OF INDIA
IFSC Code : SBIN0000930
Branch Code : 00930

A/c Name : City Revival AG Church
A/c Number : 1196172000007824
Bank Name : KARUR VYSYA BANK
IFSC Code : KVBL0001196
Branch Code : 001196

# JESUS, THE PRINCE OF PEACE

***Rev. Dr. Jerry Daniel***

*Loving Greetings to you all in the name of Jesus who is the Prince of Peace.*

Isaiah prophesies about the birth of Jesus: "For to us a child is born, to us a son is given, and the government will be on His shoulders. And He will be called Wonderful Counselor, Mighty God, Everlasting Father, Prince of Peace" (Isaiah 9:6). Prophet Micah foretold, "Jesus shall be our Peace" (Micah 5:5). In the Gospel of Luke, priest Zechariah sings prophetically that Jesus is the rising sun that shines to guide our feet into the path of peace (Luke 1:78-79). This Lord Jesus, who is the Prince of Peace, was born for us. His divine peace is at work in our lives in 3 stages. I wish to share about that through this message.

## Peace with the Most-High God (UPWARD PEACE)

The Bible says that we have peace with God through our Lord Jesus Christ (Romans 5:1).For when we were God's enemies, we were reconciled with Him through the death of His Son (Romans 5:10). How did we become enemies to God? Sin entered the world through Adam and Eve and the whole humanity became sinful (Romans 5:12). Hence, King David cries, "Surely I was sinful at birth, sinful from the time my mother conceived me" (Psalms 51:5). The Bible says, "Your iniquities have separated you from God". (Isaiah 59:2). We became worthy of death because, the wages of sin is death(Romans 6:23). Sin ruins the relationship and the peace we have with God. However, Lord Jesus shed His blood and brought us peace and reconciliation with Most High God (Col 1:20). More than that, Jesus Himself became our peace by abolishing the enmity we had with God through His death on the cross. He also made us new creations and reconciled us with the Most High God (Ephe 2:14-16).

Sin will rob our peace. "There is no peace for the wicked", says the Lord (48:22; 57:21). "The wicked are like the tossing sea, which cannot rest", states the Bible (Isaiah 57:20).One day a woman who lived a sinful life, came to Jesus seeking forgiveness. Then Jesus said to her, "Your sins are forgiven. Go in peace" (Luke 7:37, 48-50). Jesus came to this world for this very purpose, to reconcile us with the Most High God. Have you lost your peace with God? If so, repent today, renounce your sins and receive the forgiveness and peace the Lord Jesus gives through his blood.

## Peace in the Heart (INWARD PEACE)

Jesus says, “Do not let your heart be troubled. Peace I leave with you; My peace I give you. I do not give to you as the world gives. Do not let your heart be troubled and do not be afraid” (John 14:1, 27). Fear and anxiety will spoil the peace of mind. Peace that the world gives is temporary. Whereas, Jesus completely removes the fears and anxieties that torment our mind. How does this happen? What should we do for this? We must fully trust God and hold fast to Him. The Word of God says, “You will keep in perfect peace him whose mind is steadfast, because he trusts in you” (Isaiah 26:3). 'Perfect Peace' means peace that is permanent and continuous. This also means that God gives us the assurance of divine protection and care to those who totally trust Him and cling to Him.

“Do not be anxious about anything, but in everything, by prayer and petition, with thanksgiving, present your requests to God. And the peace of God, which surpasses all understanding, will guard your hearts and your minds in Christ Jesus” (Phil 4:6,7)is Apostle Paul's counsel to us. We read about a woman who suffered for 12 long years with a bleeding issue. She spent all her wealth to obtain cure but she did not get well. Nevertheless, when she trusted Jesus and approached Him with faith, she received complete healing and peace of mind (Luke 8:43-48). Likewise, Jesus brought peace to the apostles and comforted them when they were hiding indoors for fear of Jews (John 20:19, 21, 26). The Lord visited Gideon who was living in fear of the Midianites and strengthened him by revealing Himself as “The Lord of Peace” (Jehovah Shalom) (Judges 6:23-24). Dearly beloved, surrender all your fears and anxieties today to Jesus the Prince of Peace and receive the divine perfect peace from Him and rejoice.

## Peace with others (OUTWARD PEACE)

Jesus wants to offer us peace in our relationships as much as He wants to give us peace with God and in our mind. The Bible clearly instructs us to be at peace with everyone as far as we can (Romans 12:18; Heb 12:14). Nowadays, there is peacelessness and domestic violence in many families. Moreover, divorces are rampant owing to disharmony between husbands and wives. In the same manner, there is neither peace among parents and children nor among siblings. The reason for discard in relationships is apathy, ego and lack of forgiveness. We read in the scriptures, that though Jesus, being in very nature God, made Himself nothing, taking the very nature of a servant, made in human

likeness, humbled Himself and became obedient to death, just because of His unconditional love for us (Phil 2:6-8). Not only this, Jesus demonstrated His love for us by dying for us while we were yet sinners (Romans 5:8).

Being followers of Christ, if we express such unconditional love and humble attitude towards others, we too will enjoy peace in our relationships. Only then, Jesus shall be our peace and will break the dividing wall of hostility (Eph.2:14).We read about the parable of the prodigal son in the Gospel of Luke (Luke 15:10-24). We observe that the prodigal son left his father because of his arrogance; later he realizes his mistake and returns to his father humbly seeking for apology. But even before he could do that, the father expresses his unconditional love and forgives his son. This kind of unconditional love, humility and forgiving attitude alone can promote harmony and intimacy in relationships. Are you shedding tears thinking of the broken and lost relationship in your life? Do not worry. If you are willing to forgive and seek pardon with love and humbleness, Jesus is able to repair and restore your precious relationships.

Dearly Beloved, the God we worship is the God of Peace; (Romans 5:33; Heb 13:20), the Prince of Peace (Isaiah 9:6) and the Source of Peace (Micah5:5). The Bible promises, that the Lord will bless His people with peace (Psalm 29:11). Therefore, according to these scriptures, may the perfect peace of Christ fill and enrich your lives.

***"Now may the Lord of Peace Himself give you peace at all times and in every way. The Lord be with all of you" (2 Thes. 3:16)***


அக்டோபர்
22, 23
சனி, ஞாயிறு
மாலை 6.00 மணி

ஆசீர்வாதப் பெருவிழா

இடம்
சிட்டி ரிவைவல் ஏ.ஜி.சர்ச்
ஜென்னி பிளாசா,
கண்டோன்மெண்ட், திருச்சி – 1
(ஆர். சி. பள்ளி எதிரில்)

பாடல், தேவ செய்தி
பாஸ்டர். மதுராந்தகம் இயேசுதாஸ்



இயேசு கிறிஸ்து அருளும் விடுதலை, சுகம்,
சமாதானம், ஆசீர்வாதம் பெற
உங்களை அன்புடன் அழைக்கின்றோம்!

# Why was Christ Born?

Greetings in the name of the historical Christ whose birth divided the world history into BC (before Christ) and AD (anno Domini)! Every year all over the world millions of people celebrate the birth of Christ. Let's meditate why Christ was born 2022 years ago and what is our role in his birth.

**The Purpose of Christ's Birth**

**1. To REVEAL God**

"No man hath seen God at any time, the only begotten Son, which is in the bosom of the Father, he hath declared him," says the Bible (John1:18). Christ was born to reveal God's love, compassion, kindness and power. "He that has seen me has seen the Father"( John 14:9). God came down to this world in the form of Christ. God revealed himself so as to relate himself with man, to take part in his sufferings and redeem him from his problems.

2. **To REDEEM Mankind**

Christ was born in this world as a Saviour and Redeemer. Jesus means Redeemer (Mathew 1:21). Christ redeems us from the following:

❖ **Sins :** Christ who was born sinless redeems us from all our sins. The blood that Christ shed for us on the cross redeems us from all our original sins and from the sins of our deeds. (I John1:7). We are all born in sin and the wages of sin is death (Romans 6:23). But Jesus from heaven gives us redemption and eternal life.

❖ **Curse :** Jesus was born in this world to redeem people from their curses, failures and disappointments in their life. He took their entire curse on the cross. Thereby He turned their curse into blessing (Gal.3:13). He can wipe away the poverty in your life. Christ who changed the water into wine, fed the 5000 with 5 loaves and 2 fishes can redeem you from all your trouble and fulfill all your needs.

❖ **Sickness :** Jesus came to this world to redeem us from all our sickness and give us new life. He took our infirmities, and bore our sicknesses (Matthew 8:17). " He was wounded for our transgressions, he was bruised for our iniquities: the chastisement of our peace was upon him; and with his stripes we are healed" (Isaiah 53:5) says the Bible. Jesus can heal us from all our infirmities.

❖ **Fear :** Jesus redeems us from all our fears. "And delivers them, who through the fear of death were all their lifetime subject to bondage" (Hebrews2:15). When Jesus was born the angels proclaimed the good news of "Fear Not" to all the people (Luke 1:13, 30, 2:10, Matt 1:20,24).

Fear is a dreadful feeling. Today, fear about future, fear about death, fear of failure and so on torments mankind. But Jesus redeems us from all these fears.

3. **To RUIN Satan**

"The Son of God was manifested, that he might destroy the works of the devil" (I John 3:8). Today the devil is deceiving mankind and ruining their lives. "The thief cometh not, but for to steal, and to kill, and to destroy: I am come that they might have life, and that they might have it more abundantly". (John 10:10). Jesus delivered many from the bondage of Satan. Finally at the cross he triumphed over Satan and destroyed him. Since Jesus rose again from the grave on the third day and is still alive, he redeems those who are in the clutches of Satan (Acts 10:38).

**Our Role in the Birth of Christ**

1. **Give Room for Jesus in your Heart :** When Jesus, the Redeemer of the World, was born, there was no room in the inn (Luke 2:7). But whosoever gives a place in their heart to Jesus is called the children of God (John1:12). He is still knocking at the door of your heart (Rev 3:20). When you surrender your life to Him, he will dwell in you and give you redemption and peace. Today, is there a room in your heart for Him?
2. **Proclaim The Good News About Christmas To Others.** The Bible says that the shepherds shared the good news about Jesus' birth to others (Luke 2:17). We know about the birth of Jesus and the reason for his birth, but there are multitudes in your city and nation who don't know about him. Has not Jesus given us the great commission to proclaim the gospel? (Matt. 28:18-20, I Cor. 9:16). Let's introduce this Jesus, who came to this world to give his life for us, to all those who have not heard about him. Let's share the love of God by giving gifts to the poor and needy. Let's fulfill our role in Jesus Christ's birth. May God Bless You Abundantly!


பிரதி ஞாயிறு மாலை

ஆசீர்வாத இன்னிசை நற்செய்தி ஆராதனை

6.30 PM

Gospel & Music Evening

வியாதி, பிரச்சனையுள்ளவர்களுக்காக ஆராதனை முடிவில் சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்! பங்குபெறுங்கள்!

# IS INTERNET DANGEROUS?



Telephone helps us to stay connected with anyone in any part of the world. And in today's tech-savvy world internet links all the computers which have net facility. It's a web but does it ensnare us?

Keep reading..

## I. Use of Internet

- Helps to send and receive information at any time from any place.
- Helps in getting access to information about anything
- Internet games, videos and short films entertain us.
- Through internet banking services, all bank transactions can be done online.
- On line booking of bus/ train tickets saves us from standing in long queue.
- According to 2017 survey 45 Crore internet users are in India. It is calculated that by 2020 the number of netizens would escalate to 70 Crores.

## II. A Word of Caution

Though internet is useful, Beware! It can also ruin one's life. Read the following to know more about it.

### 1. Never Waste Time :

Don't spend excess time browsing the net, especially during your prime time, when you are fresh and agile. You can make the best use of it to study. When spent in internet it is a sheer waste of time.

### 2. Never Sacrifice your Sleep :

After 10 O'Clock many netizens brows internet unaware of how long they spend in browsing. This result in sleep loss and leads to tiredness during day time. A minimum of 6 hrs of sleep is essential for an individual to be healthy. After 9 O'Clock…

- 82% of the youth would be watching TV
- 55% of the youngsters browse net
- 44% of the younger generation would be still chatting over phone
- 34% of them would be texting
- Only 21% of them have the required 8 hours of sleep.

### 3. Never Sacrifice your Quite Time :

Nothing is more important than reading and meditating the Word of God. When internet is your priority it becomes your idol. As you lose interest in prayer and reading the word of God, backsliding sets in.

### 4. Never Waste your Money :

Budget your internet expenses and never over spend on it. You are accountable about your money to God.

**5. Never Sacrifice your Health :**

Spending more time in front of computers might cause back pain, neck pain, obesity, vision disorder, hearing impairment etc. Once health is lost, it can never be regained at any expense.

**6. Never Keep Computer in a Secluded Place :**

When computer is kept in a private place there are more chances of yielding to the temptation to browse unwanted web sites and this corrupts our holiness. So keep the computer in a place where all the members of the family can have access. This saves us from sin.

**7. Never Sacrifice Family Bonding :**

Spending more time in front of computer leads to isolation and prevents one from spending quality time with family and thereby breaks interpersonal relationships.

**8. Use Internet Judiciously :**

Don't browse internet aimlessly. Use only when it is needed. When one browses to just while away time, one may stumble upon unwanted contents and later feel guilty for browsing them.

**9. Never Browse Unwanted Advertisement :**

While browsing never click any unnecessary advertisement, for one seemingly harmless hyperlink might connect you to unnecessary and unwanted web sites. So be careful with the very first click of the mouse since it takes you beyond boundaries.

**10. Never Chat with Strangers :**

In the world of internet one might not know whether the stranger with whom one chats is a good or bad person, married or unmarried etc. so don't chat with strangers. Beware, do not be ensnared!

## நாம் தாங்கும் மிஷினரிகளுக்காக ஜெபியுங்கள்
## Pray for the Missionaries we Support



மிஷனரி. **சூரிய நாராயண தாபா** - திருமதி. **ரஞ்சிதா லாபாங் தாபா**
Missionary. **Surya Narayana Thapa** - Mrs. **Ranjitha Lapang Thapa**
(அஸ்ஸாம் - Assam)



மிஷனரி. **சாமுவேல்** - திருமதி. **சண்முக பிரியா**
Missionary. **Samuel** - Mrs. **Shanmuga Priya**
(மேற்கு வங்காளம் - West Bengal)



மிஷனரி. **இயேசு பிரகாஷ்** - திருமதி. **சுனந்தா பெல்லி**
Missionary. **Yesu Prakash** - Mrs. **Sunanda Belly**
(மஹாராஷ்திரா - Maharasthra)



மிஷனரி. **ஜோசுவா பாக்**- திருமதி. **சில்பா பாக்**
Missionary. **Joshua Bagh** - Mrs. **Silpa Bagh**
(ஒடிசா - Odissa)



மிஷனரி. **யுவராஜ்** - திருமதி. **ஜெய்ஸ்ரீ**
Missionary. **Yuvaraj** - Mrs. **Jaishree**
(ராஜஸ்தான் - Rajastan)

# THANKSGIVING

The following are the some of the truths the Bible reveals to us concerning the art of thanksgiving.

1. **Thanksgiving is a law of God to obey.** Giving thanks is not just something sweet to do. It is a precept to obey. "In everything give thanks, for this is God's will for you in Christ Jesus." (! Thess. 5:18)
2. **A prayer without thanksgiving is defective.** Prayer is not petition alone, but rather "Petitions and thanksgivings". Paul urges us, "in everything by prayer and supplication with thanksgiving let your requests be made known to God" (1Tm 2:1 Phi 4:6). Effective prayer is not just asking for things. It's also giving thanks for things. Prayer without thanksgiving is like a chair with one leg missing, or a clock with no hour hand.
3. **Thanksgiving is a life-pervading principle.** Thanksgiving is not only for special occasions. "Always giving thanks for all things" is the rule (Eph.5:20; Col. 3:15-17). We need to thank God for good things and bad things that are happening in our life (Job 1:21)!
4. **Thanksgiving counteracts bad language.** 'Thanksgiving living' is the secret of how to conquer the wayward tongue. "There must be no filthiness and silly talk, or coarse jesting, which are not appropriate, but rather giving of thanks" (Eph. 5:4). Get your lips into the habit of giving thanks, and you get them out of the habit of speaking evil.
5. **Thanksgiving is not to God alone.** Thanksgiving ought to be directed not only toward God but also to others. When Paul thanked Priscilla and Aquila, this was just as much an act of Christian thanksgiving as though they had thanked God. An expression of gratitude, to those who deserve it, makes God just as happy as a prayer of thanks to himself. It's all thanksgiving, and God loves the 'gratitude attitude' when it is shown to others just as when it is shown to him (Rom 16:3-4)
6. **Gratitude prevents many problems in life.** One fact about thanksgiving is that the lack of it causes, and the presence of it prevents, many of life's problems. If we want "the peace of God" we have to "rejoice always" and the simplest help for that is to live and pray "with thanksgiving" (Phil. 4:6-7).
7. **Thanksgiving is a gift to God.** Thanksgiving is our gift to God. We do call it thanks GIVING after all. We "offer up a sacrifice of praise to God continually, that is, the fruit of lips that give thanks to his name" (Heb.13:15-16).

**நன்றி செலுத்தும் ஞாயிறு – THANKSGIVING SUNDAY**

**நவம்பர் 27 – NOVEMBER 27**

## Sunday Services - ஞாயிறு ஆராதனைகள்

| | | |
|---|---|---|
| I Tamil Service | 7.00 am - 8.45 am | முதல் தமிழ் ஆராதனை |
| English Service | 9.00 am - 10.45 am | ஆங்கில ஆராதனை |
| II Tamil Service | 11.00 am - 12.30 pm | 2-ம் தமிழ் ஆராதனை |
| Evening Service | 6.30 pm - 8.00 pm | மாலை ஆராதனை |
| Children Service | 7.30 am, 9.30 am, 11.30 am | சிறுவர் ஆராதனை |
| Youth Meeting | 1st & 3rd Sunday-4.30 pm | வாலிபர் ஆராதனை |

## Weekly Meetings - வாராந்திர ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| Family Counselling | Tuesday - செவ்வாய்<br>10.30 am - 1.00 pm | குடும்ப ஆலோசனை |
| Women's Prayer | Thursday - வியாழன்<br>10.30 am - 1.00 pm | பெண்கள் ஜெபம் |
| Men's Fellowship | 3rd Monday -<br>மூன்றாம் திங்கள்<br>7.00 pm - 8.30 pm | ஆண்கள் ஐக்கியம் |
| Youth Fellowship | 1st & 3rd Sunday<br>முதல் மற்றும்<br>மூன்றாம் ஞாயிறு<br>4.30 pm - 6.00 pm | வாலிபர் கூடுகை |
| Prayer Cells | Wed/Thu -<br>புதன் / வியாழன்<br>7.00 pm - 8.00 pm | ஜெபக்குழுக்கள் |
| Intercessory Night Prayer | 1st Friday -<br>முதல் வெள்ளி<br>6.30 pm - 9.00 pm | மன்றாட்டு இரவு ஜெபம் |
| Chain Prayer | 4th Friday -<br>நான்காம் வெள்ளி<br>9.00 a.m - 9.00 p.m | சங்கிலி ஜெபம் |
| Early Morning Communion Service | 1st Day of the Month,<br>மாதத்தின் முதல் நாள்<br>5.00 a.m - 6.30 a.m | அதிகாலை திருவிருந்து ஆராதனை |

**Assistant Pastors**

Pr. I. Joseph Samuel
88700 74415
Pr. S. Santhosh Yobu
95973 28741

**Scan & Give**

Paytm G Pay PhonePe

# City Revival A.G. Church

*Warmly Welcomes you to the*

## PRAISE & WORSHIP SERVICES

**EVERY SUNDAY**

Tamil Service - 7.00 a.m, 11.00 a.m
English Service - 9.00 a.m
Evening Service - 6.30 p.m

**ஞாயிறு தோறும்**

தமிழ் ஆராதனை 7.00 மணி, 11.00 மணி
ஆங்கில ஆராதனை 9.00 மணி
மாலை ஆராதனை 6.30 மணி

**Venue : A/c Hall, 1st Floor, JENNE PLAZA,**
No.5, Bharathiyar Salai, (Near Head Post Office),
Cantonment, Trichy - 1.

**Anointed and Lively Worship, Soul-stirring Music & Practical, Life-changing Messages**

***Come with your friends & family & Receive the blessings of God***



**Sunday School is conducted for kids below 14 years**





**Rev. Dr. JERRY DANIEL**
Cell : 94434 15484, 98423 15484
www.facebook.com/jerrydanieltrichy
jerrydanieltrichy@gmail.com
www.cityrevivalagchurch.org